**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 89 of 2023

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : கவிதா

Father's Name : க/பெ. ராஜேந்திரன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of January** 2026.

**(1 ம், 2 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது அப்பநாயக்கன்பட்டியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 29.11.2022 ம் தேதியன்று என் தம்பிக்கு சாமி கும்பிடுவதற்காக நான் மட்டும் கதிர்நாயக்கன்பாளையத்திற்கு சென்றுவிட்டேன். என் கணவர் மறுநாள் காலை 8 லிருந்து 9 மணியளவில் தம்பிக்கு சாமி கும்பிடுவதற்காக கதிர்நாயக்கன்பாளையம் வந்திருந்தார். பின்னர் என் கணவர் மாலை எங்கள் வீட்டிற்கு செல்வதற்காக கிளம்பி சென்றுவிட்டார். நான் அங்கேயே இருந்துவிட்டேன். பின்னர் மாலை 7 மணியளவில் என் கணவர் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு வீட்டில் உள்ள கதவு உடைக்கப்பட்டிருப்பதாகவும், நகை மற்றும் பணம் திருட்டுபோயிருப்பதாக தெரிவித்ததன் பேரில் நான் வீட்டிற்கு மறுநாள் கிளம்பி வந்தேன்.

2. என் பீரோ மற்றும் என் மருமகள் பீரோவில் இருந்த கம்மல் 4 ஜோடி, மோதிரம் 4 ஜோடி,

செயின்கள், ஆரம், நெக்லஸ் 2 பவுன், சின்ன சின்ன கம்மல்கள் மொத்தம் 22 பவுன் மற்றும் பணம் ரூ.1,60,000/-காணாமல் போயிருந்தது. பின்னர் டிசம்பர் 1 ம் தேதி காவல் நிலையம் சென்று என் கணவர் புகார் அளித்தார். போலீசார் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய பணம் மற்றும் நகைகளை திரும்ப பெற்று கொண்டேன். புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் காணமால் போன நகைகள் ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி தரப்பு வழக்கறிஞயர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.29 18:38:04 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**